


கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த கன மழையின் காரணமாக மரம் முறிந்து விழுந்து மரணமடைந்த இராஜாக்கமங்கலம் வட்டம், கார்த்திகைவடலி என்ற இடத்தை சேர்ந்த திரு.இராஜேந்திரன்,விளவங்கோடு தாலுகா வன்னியர் பரைக்கோடு என்ற இடத்தை சேர்ந்த அலெக்ஸாண்டர், கல்குளம் தாலுகா மணலிவிளையை சேர்ந்த சரஸ்வதி ஆகியோர்களின் குடும்பத்தினருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, மாண்புமிகு மின்சாரம்,மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி, மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.ஆர்.பி உதயகுமார் ஆகியோர் தலா ரூபாய் 4 இலட்சத்திற்கான காசோலையினை இன்று (02.12.2017) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வழங்கினார்கள்.உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் எம்.பி, கண்காணிப்பு அலுவலர்கள் திரு.இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., திரு.டி.இராமசந்திரன் இ.ஆ.ப., திருமதி.ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

செ.வெ.எண்: 898/2017 நாள்: 02.12.2017

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள் ஆகியோர், கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த கனமழையின் காரணமாக, மரம் முறிந்து, விழுந்ததில் மரணமடைந்த 3 நபர்களின் குடும்பத்தினர்களுக்கு, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 4 இலட்சத்திற்கான காசோலைகளை இன்று (02.12.2017) வழங்கி, ஆறுதல்களை தெரிவித்தார்கள்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த கனமழையின் காரணமாக, பல்வேறு இடங்களில் மரங்கள் விழுந்ததில், மின்கம்பங்கள் சேதமடைந்துள்ளது. இதில், மரம் முறிந்து, விழுந்ததால், 8 நபர்கள் மரணமடைந்தார்கள். இதில், மரணமடைந்த அகஸ்தீஸ்வரம் வட்டம், இராஜாக்கமங்கலம், கார்த்திகை வடலி என்ற இடத்தை சார்ந்த இராஜேந்திரன் (வயது 35), விளவங்கோடு வட்டம், வன்னியூர் என்ற இடத்தை சார்ந்த அலெக்சாண்டர் (வயது 60), கல்குளம் வட்டம், மண்டைகாடு, மணலிவிளை என்ற இடத்தை சார்ந்த சரஸ்வதி (வயது 66) ஆகிய 3 நபர்களின் குடும்பத்தினர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 4 இலட்சத்திற்கான காசோலைகளை, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. டி.கே. இராமசந்திரன் அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில், இன்று (02.12.2017) மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் வழங்கினார்கள்.

அதனை தொடர்ந்து, கண்காணிப்பு அலுவலர்கள் திரு. டி.கே. இராமச்சந்திரன் இ.ஆ.ப., திரு. இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., திருமதி ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப., ஆகியோர்கள் தலைமையில், மழை காரணமாக ஏற்பட்ட சேதங்கள் மற்றும் மேற்கொண்ட நிவாரணபணிகள் குறித்த ஆய்வு கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், ஒகி புயல் பாதிப்பு காரணமாக, நகராட்சி, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம், உள்ளாட்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகள் குறித்தும், பொதுமக்களுக்கு பாதிப்பின்றி, இயல்பு நிலை திரும்ப மேற்கொண்ட பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், 29.11.2017 நள்ளிரவு முதல் கடுமையான சூரைக்காற்றுடன் கன மழை பெய்து, ஒகி புயலாக மாறியது. இதனால், இதுவரை கண்டிராத கடும் சேதம், மாவட்டம் முழுவதும் ஏற்பட்டது. குறிப்பாக, மாவட்டத்தில் உள்ள சாலைகள் சேதமடைந்து, பல்வேறு இடங்களில் போக்குவரத்து முற்றிலுமாய் துண்டிக்கப்பட்டது.

மின்மாற்றிகள், மின்கம்பங்கள் வேரோடு பிடுங்கப்பட்டும், முறிந்து விழுந்தும் கம்பிகள் துண்டிக்கப்பட்டதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, 29.11.2017 அன்று மாவட்டம் முழுவதும் மின்சாரம் நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால், மனித உயிர்சேதம் பெருமளவில் தவிர்க்கப்பட்டது. மேலும், சாலையோர மரங்கள், தனியாருக்குச் சொந்தமான பல்வேறுவிதமான மரங்கள், இரப்பர் சாகுபடி மற்றும் வயல் நிலங்கள் இப்புயலினால் முற்றிலும் பாதிக்கப்பட்டதுடன் தண்ணீர் தேங்கியதால் பயிர் வகைகள் மூழ்கிபோயின. சூறைக்காற்றுடன் மழை பெய்ததால், மரம் விழுந்து 8 நபர்கள் உயிரிழந்தார்கள். பல்வேறு இடங்களில் உள்ள வீடுகளில் வெள்ளம் சூழ்ந்த நிலை காணப்பட்டது. இதில், சுமார் 2,391 நபர்கள் பாதிக்கப்பட்டார்கள். இவர்களின் பாதுகாப்பு நலன்கருதி, 29 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் மற்றும் மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டு, அவர்களை பராமரிக்கப்பட்டு வந்தது.

மேற்கண்ட சேதங்கள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய அவசர நடவடிக்கைகளை கண்காணிக்க, மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர்களால் துறை அலுவலர்கள் கொண்ட துணை குழுக்கள் அமைக்கப்பட்டு சேதமடைந்த இடங்கள் பார்வையிடப்பட்டு, சேத விபரங்கள் சேகரிக்கப்பட்டு சேதமடைந்த மரங்கள் மற்றும் மின் கம்பிகள் அப்புறப்படுத்தும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு தற்போதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சேத விபரங்களை குறித்த தகவல்களை தெரிவிக்கவும் தொடர்ந்து கண்காணிக்காவும், ஏதுவாக 24 மணி நேரமும் செயல்படும் வகையில் உரிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, மாவட்ட பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு அறை (எண்: 1077, 9445008139, 9442480028) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

| வ. எண். | | |
|---|---|---|
| 1. | பாதிக்கப்பட்டுள்ள மக்கள் | 3500 |
| 2. | முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் | 2391 |
| 3. | உயிரிழந்தோர் | 8 |
| 4. | காயமடைந்தவர்கள் | 6 |
| 5. | பாதிக்கப்பட்ட வீடுகள் | 967 |
| 6. | முகாம்களின் எண்ணிக்கை | 29 |
| 7. | சேதமடைந்த மின்கம்பங்கள் | 3728 |
| 8. | சேதமடைந்த மின்மாற்றிகள் | 45 |
| 9. | சேதமடைந்த மரங்கள் | 1500 |
| 10. | காணாமல் போன மீன்பிடி படகுகள் | 39 |
| 11. | கடலில் மூழ்கிய மீன்பிடி படகுகள் | 8 |

| | | | |
|---|---|---|---|
| 12. | காணாமல் போன மீனவர்கள் (இவர்களில் இதுவரை 73பேர் மீட்கப்பட்டுள்ளனர்) | 155 | |
| 13. | சேதமடைந்த சாலைகள்<br>1. தேசிய நெடுஞ்சாலை<br>2. நகர சாலைகள்<br>3. கிராம சாலைகள் | <br>50 கி.மீ.<br>210 கி.மீ.<br>115 கி.மீ. | |
| 14. | சேதமடைந்த பயிரினங்கள் | பாதிக்கப்பட்ட பரப்பு (ஹெக்டேரில்) | பாதிக்கப்பட்ட விவசாயிகள் |
| | 1. நெற் பயிர் | 4241.54 | 11883 |
| | 2. தென்னை | 4.85 | 280 |
| | 3. வாழை | 1273 | 6200 |
| | 4. மரவள்ளி கிழங்கு | 353 | 1760 |
| | 5. இரப்பர் | 1326 | 1350 |
| | 6. கிராம்பு | 30 | 20 |
| | 7. நல்லமிளகு | 10 | 10 |
| | 8. பாக்கு மரம் | 10 | 20 |

மேற்படி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தினமும் உணவு, மருத்துவ வசதி வழங்கப்பட்டு வருகிறது. பெட்ஷீட், பாய் போன்ற உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய பணிகளை மேற்கொள்ள துணை ஆட்சியர் நிலையில் மேற்பார்வை அலுவலர்களும், ஒவ்வொரு முகாமிற்கும் வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. மின்வாரிய அலுவலகத்தில் வட்டாட்சியர், உதவியாளர் கொண்ட 24 மணி நேரம் செயல்படும் கட்டுப்பாட்டறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் மின்சாரம் தொடர்பான புகார்களை தெரிவிக்கவும் அதனை உடனடியாக சரிசெய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சேதமடைந்த சுமார் 1500 மரங்களில் போக்குவரத்திற்கு இடையூறாகவும், மின்கம்பிகள் மீது விழுந்திருந்த 715 மரங்கள் தீயணைப்புத்துறை மற்றும் காவல்துறை மூலம் உடனடியாக அப்புறப்படுத்தப்படடுள்ளது. எஞ்சிய மரங்களை அப்புறப்படுத்தும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. மின்சாரத்துறை மூலம் முறிந்துள்ளி மின்கம்பிகள் சரிசெய்யும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரையில் 1850 மின்கம்பங்கள் சரி செய்யப்பட்டுள்ளது.

30.11.2017 அன்று துவக்கப்பட்ட மீட்பு பணி நடவடிக்கைகள், கண்காணிப்பு பணிகள் அனைத்தும் தற்போது முழுவீச்சில் மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ராஹுல்நாத் இ.ஆ.ப., மாவட்ட வன அலுவலர் திரு. விஸ்மிஜூ விஸ்வநாதன் இ.வ.ப., திரு. ஜெகனி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி பரிதாபானு மற்றும் பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.